بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 09/08/2024 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

**முரைஸீஃ போரின் நிலைமைகள் மற்றும் நிகழ்வுகளைப் பற்றிய எடுத்துரைப்பு வங்காள தேசம் மற்றும் பாக்கிஸ்தானின் அஹ்மதிகளுக்காவும், பாலஸ்தீனத்தின் முஸ்லிம்களுக்காகவும் துஆக்கள் செய்ய வலியுறுத்தல்**

أَشْهَدُ أَنْ لَّآ إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ﴿۲﴾ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۳﴾ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ﴿۴﴾

اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ﴿۵﴾ اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ﴿۷﴾

முரைஸீஃ போர் பற்றி கூறப்பட்டு வந்தது. அப்துல்லாஹ் பின் உபை ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் குறித்து தவறான விஷயங்களைப் பேசினான் மற்றும் நயவஞ்சகமாக நடந்து கொண்டான் என்பதும் கூறப்பட்டிருந்தது. ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் சீரத் காத்தமுன்னபிய்யீனில் இந்த சம்பவத்தின் விளக்கத்தை எடுத்துரைத்தவாறு இவ்வாறு எழுதியுள்ளார்கள்: போர் நிறைவடைந்த பிறகு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் சில நாள்கள் முரைஸீஃயில் தங்கியிருந்தார்கள். ஆனால், அங்கு தங்கியிருந்த போது நயவஞ்சகர்களால் எத்தகைய விரும்பத்தகாத நிகழ்வு நடந்தது என்றால், அதனால் பலவீனமான முஸ்லிம்களுக்கிடையில் உட்சண்டையே வந்திருக்கும். ஆனால், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் சந்தர்ப்பம் அறிந்து செயல்படும் திறனும், கவர்ந்திழுக்கும் ஆற்றலும் இந்த பயங்கரமான விளைவுகளிலிருந்து முஸ்லிம்களைக் காப்பாற்றி விட்டன.

அந்த சம்பவம் இவ்வாறு உள்ளது: ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் ஒரு பணியாளர் ஜஹ்ஜாஹ் 'முரைஸீஃ' எனும் இடத்தில் நீரூற்றில் தண்ணீர் எடுக்கச் சென்றார். தற்செயலாக அதே நேரத்தில் அன்ஸாரிகளின் கிளைக் கோத்திரத்தைச் சேர்ந்த சினானும் தண்ணீர் எடுக்க அங்கு வந்து சேர்ந்தார். இந்த இருவரும் பாமரர்களாக, அறிவீனர்களாக இருக்கும் மக்களைச் சேர்ந்தவர்களாக இருந்தார்கள். நீரூற்றில் இவர்கள் இருவரும் ஒருவர் மற்றவருடன் சண்டையிடத் துவங்கினார்கள். ஜஹ்ஜாஹ் சினானை அடித்து விட்டார். சினான், "அன்ஸாரிகளின் கூட்டமே! எனக்கு உதவ வாருங்கள்" என்று உரக்கக் கத்தினார். ஜஹ்ஜாஹ் இதைக் கண்டதும் அவரும் முஹாஜிர்களைத் தனக்கு உதவிக்கழைத்தார். அன்ஸாரிகள் மற்றும் முஹாஜிர்களில் எவர்களின் காதுகளை இந்த ஓசை சென்றடைந்ததோ அவர்கள் வாள்களை எடுத்துக் கொண்டு ஆவேசமாக அந்த நீரூற்றின் பக்கம் விரைந்தார்கள். பார்த்துக் கொண்டிருக்கும் போதே அங்கு ஒரு நல்ல கூட்டம் கூடி விட்டது. இரு பிரிவினரும் ஒருவர் மற்றவர் மீது தாக்குதல் தொடுத்தே இருப்பார்கள்; அதற்குள் சில கலப்பற்ற மக்கள் முஹாஜிர்களையும் அன்ஸாரிகளையும பிரித்து விட்டு சமரசம் செய்து வைத்து விட்டார்கள். இந்தத் தகவல் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை எட்டிய போது அன்னார் இதை அறிவீனத்தை வெளிப்படுத்துதலாகக் கூறினார்கள். மேலும், கோபத்தை வெளிப்படுத்தினார்கள்.

நயவஞ்சகர்களின் தலைவன் அப்துல்லாஹ் பின் உபை பின் ஸலூலுக்கு இந்த நிகழ்வு பற்றிய தகவல் கிடைத்த போது, அவன் அந்தக் குழப்பத்தை மீண்டும் எழுப்ப நினைத்தான். அவன் தன்னுடைய கூட்டாளிகளை ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் எதிராக நன்றாகத் தூண்டி விட்டான். அவன், ''நாம் மதீனாவுக்கு செல்லும் போது கண்ணியத்திற்குரிய நபர் அல்லது குழு இழிவான நபர் அல்லது குழுவைத் தனது ஊரிலிருந்து வெளியேற்றி விடும்'' என்ற அளவுக்குக் கூறிவிட்டான். அப்பொழுது ஒரு கலப்பற்ற முஸ்லிம் சிறுவர் ஹஸ்ரத் ஸைது பின் அர்கம் (ரலி) அவர்கள் அங்கு இருந்தார்கள். அவர்கள் இந்தச் சொற்களைக் கேட்ட போது உடனடியாக தம் சாச்சா மூலமாக ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு இதைப் பற்றித் தகவல் தெரிவித்தார்கள்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இந்த சொற்களைக் கேட்டதும், கடும் கோபம் கொண்டார்கள். அவர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் அப்துல்லாஹ் பின் உபையைக் கொல்வதற்கு அனுமதி வேண்டினார்கள். ஆனால், கண்ணியத்திற்குரிய ஹுஸூர் (ஸல்) அவர்கள் மென்மையைக் கடைபிடிக்குமாறு வழிகாட்டல் வழங்கினார்கள். அப்துல்லாஹ் மற்றும் அவனுடைய கூட்டாளிகளை வரவழைத்தார்கள். நாங்கள் இப்படி எதுவும் பேசவில்லை என்று அவர்கள் சத்தியம் செய்தார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அப்பொழுதே புறப்படக் கட்டளையிட்டார்கள். முஸ்லிம் படை புறப்பட்டு விட்டது. இந்த சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் உஸைது பின் ஹுஸைர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் நேரமற்ற நேரத்தில் உடனடியாகப் புறப்படுவது குறித்து வினவினார்கள். அப்பொழுது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், ''நீர் அப்துல்லாஹ் பின் உபை கூறிய சொற்களைக் கேட்கவில்லையா?'' என்று கேட்டார்கள். அதற்கு உஸைத் (ரலி) அவர்கள், ''ஆம், அல்லாஹ்வின் தூதர் அவர்களே! {(ஸல்)} தாங்கள் விரும்பினால், மதீனா சென்றடைந்து அப்துல்லாஹ் பின் உபையை நாடுகடத்தலாம்'' என்று கூறினார்கள்.

அப்துல்லாஹ் பின் உபை மகனுக்கு விஷயம் தெரிய வந்ததும், அவர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம், ''அல்லாஹ்வின் தூதர் அவர்களே! {(ஸல்)} தாங்கள் எனக்குக் கட்டளையிட்டால், நான் உடனடியாக அப்துல்லாஹ் பின் உபையின் தலையைத் தங்கள் முன் வைத்து விடுவேன்'' என்று பணிவுடன் கேட்டுக் கொண்டார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், ''நான் அவனைக் கொல்லவும் நினைக்கவில்லை; எவருக்கும் அதற்கான கட்டளையும் இடவில்லை. நாம் நிச்சயம் அவருடன் நல்ல முறையில் நடந்து கொள்வோம்'' என்று கூறினார்கள். இந்தப் பயணத்தில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு வஹீ இறங்கியது. அதில் ஹஸ்ரத் ஸைது பின் அர்கம் (ரலி) அவர்களின் கூற்று மெய்ப்பிக்கப்பட்டு விட்டது.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் இந்த முழு நிகழ்வையும் எடுத்துரைத்து இவ்வாறு கூறுகிறார்கள்:

இஸ்லாமிய படை மதீனாவுக்கு அருகில் சென்றடைந்த போது, அப்துல்லாஹ் பின் உபையின் மகன் முன்னால் வந்து தம் தந்தை வழியை மறித்து விட்டார்கள். மேலும், ''நீ ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு எதிராக பயன்படுத்திய அந்தச் சொற்களைத் திரும்பப் பெறாத வரை நான் உன்னை மதீனாவுக்குள் நுழைய விடமாட்டேன். எந்த வாயிலிருந்து அல்லாஹ்வின் நபி இழிவானவர் என்றும், நீ கண்ணியத்திற்குரியவன் என்றும் சொல் வந்ததோ, அதே வாயால் அல்லாஹ்வின் நபி கண்ணியத்திற்குரியவர்

ஆவார்கள் என்றும், நீ இழிவானவன் என்றும் நீ கூறியே ஆக வேண்டும்'' என்று கூறினார்கள். அப்துல்லாஹ் பின் உபை பின் ஸலூல் வியந்தும், பயந்தும் போனான். அவன், ''மகனே! நான் உன்னுடன் கருத்தொருமிக்கிறேன். முஹம்மத் {(ஸல்)} அவர்கள் கண்ணியத்திற்குரியவர் ஆவார்கள். நான் இழிவானவன் ஆவேன்'' என்று கூற ஆரம்பித்து விட்டான். இதனால் இளைஞர் அப்துல்லாஹ் தம் தந்தையை விட்டு விட்டார்கள்.

இந்தப் பயணத்தின் போது, ஹுஸூர் (ஸல்) அவர்களின் ஒட்டகமும் தொலைந்து போய்விட்டது. நயவஞ்சகர்களில் ஒருவர் இதனால் மகிழ்ச்சியைக் கொண்டாட ஆரம்பித்து விட்டார். அவர் ஒரு சபையில், ''ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கோ மறைவானவற்றைப் பற்றிய பெரும் பெரும் செய்திகள் கிடைத்து விடுகின்றன. பிறகு, இந்த ஒட்டகத்தைப் பற்றித் தெரிய முடியாதா?'' என்று கூறினார். சபையில் இருந்த மக்கள் அவரது நயவஞ்சகமான பேச்சுக்களைக் கேட்ட போது, அவரைத் தம்மை விட்டு விலக்கி விட்டார்கள். அவர் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் சபையை சென்றடைந்த பொழுது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், ''இந்த சம்பவத்தால் ஒருவர் மகிழ்ச்சியைக் கொண்டாடுகிறார். மறைவானவற்றைப் பற்றிய அறிவு அல்லாஹ்வுக்கு மட்டுமே இருக்கிறது. அவன் எனக்கு அந்த ஒட்டகத்தைப் பற்றி கூறி விட்டான். அது முன்னால் அந்தப் புதரில் இருக்கிறது'' என்று கூறினார்கள். அதனால் அந்த முனாஃபிக் மனிதர் வியந்து, திகைத்துப் போனார்; மிகவும் வெட்கப்பட்டார். தன்னுடைய கூட்டாளிகள் இருந்த சபையில் அவர், ''எனக்கு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் விஷயத்தில் ஐயம் இருந்தது. ஆனால், இன்று எல்லா ஐயங்களும் அகன்று விட்டன. நான் இன்றுதான் இஸ்லாத்தை ஏற்றது போல் உள்ளது'' என்று கூறினார்.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:* இதன் மேற்கொண்ட விபரமும், சம்பவங்களும் இனி எடுத்துரைக்கப்படும். இன் ஷா அல்லாஹ்.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:* இப்பொழுது நான் வங்காள தேசத்தின் நிலைமை குறித்து சிறிது கூற விரும்புகிறேன். அங்கு அரசாங்கத்துக்கு எதிராகக் குழப்பம் ஏற்பட்டது. அரசாங்கமோ முடிவுக்கு வந்து விட்டதுதான்; ஆனால், குழப்பம் தொடர்கிறது. நேற்றிலிருந்து நிலைமை சற்று மேம்பட்டுள்ளது. ஜமாஅத்தின் எதிரி கூட்டங்கள் இந்த நிலைமைகளிலிருந்து பயனடைந்தவாறு அஹ்மதிகளுக்கு இழப்பை ஏற்படுத்தத் துவங்கி விட்டார்கள். நம்முடைய சில பள்ளிவாசல்கள் உடைத்து நொறுக்கப்பட்டுள்ளன. அவை எரிக்கப்பட்டுள்ளன. ஜாமிஆ அஹ்மதிய்யாவுக்கும், ஜமாஅத் கட்டடங்களுக்கும் இழப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. அங்கு உடைத்து நொறுக்கப்பட்டுள்ளது. பொருள்கள் எரிக்கப்பட்டுள்ளன. பல அஹ்மதிகள் காயமடைந்தும் உள்ளார்கள். அவர்களுடைய வீடுகள் எரிக்கப்பட்டுள்ளன. இழப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

சில வீடுகள் முழுவதுமாக எரிக்கப்பட்டு விட்டதாகத் தகவல்கள் கிடைத்துள்ளன. முற்றிலும் அக்கிரமமான செயல் ஆகும். அஹ்மதிகளுக்கு அந்தப் பகுதியில் ஜல்ஸாவின் போது, இரண்டு முறை இழப்பை எதிர்கொள்ள நேரிட்டது. ஆனால், அவர்களுடைய ஈமான் சிறிதும் ஆட்டங்காணவில்லை. அல்லாஹ்வின் அருளால் ஈமானில் உறுதியாக உள்ளார்கள். அவர்கள், ''அல்லாஹ்வுக்காக நாங்கள் இவை அனைத்தையும் பொறுத்துக் கொள்வோம்'' என்று கூறியுள்ளார்கள். அல்லாஹ் கருணையும் அருளும் புரிவானாக! அஹ்மதிகளைத் தனது பாதுகாப்பில் வைப்பானாக! எதிரிகளைப் பிடிப்பானாக!

இவ்வாறே பாக்கிஸ்தானின் அஹ்மதிகளுக்காகவும் துஆ செய்யுங்கள். அங்கும் மீண்டும் கடுமையான நிலைமைகள் உருவாகி விட்டன. அல்லாஹ் அவர்களையும்

எல்லாத் தீங்குகளிலிருந்தும் பாதுகாத்து வைப்பானாக! இன்றைய நாள்களில் முல்லாக்கள் மற்றும் லாப நோக்குடையவர்கள் அஹ்மதிகளுக்கு எதிராக அதிகம் மும்முரமாக ஈடுபட்டுள்ளார்கள். அல்லாஹ் மற்றும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் பெயரில் இந்த மக்கள் அநீதியிழைக்கிறார்கள். அல்லாஹ் அவர்களைப் பிடிப்பதற்கான ஏற்பாட்டையும் விரைவில் செய்வானாக!

பாலஸ்தீனத்தின் முஸ்லிம்களுக்காகவும் துஆக்கள் செய்யுங்கள். அல்லாஹ் அநீதியிழைக்கும் மக்களைப் பிடிப்பானாக! இந்த அநீதி முடிவுக்கு வரட்டுமாக! பொதுவாக முஸ்லிம் உலகிற்காக துஆ செய்யுங்கள். இவர்கள் ஒருவர் மற்றவர் மீது இழைக்கும் அநீதிகளும் முடிவுக்கு வரட்டுமாக! இவர்கள் அல்லாஹ்வுடன் உண்மையான தொடர்பை உருவாக்கக்கூடியவர்களாக ஆவார்களாக! காலத்தின் இமாமை ஏற்றுக் கொள்ளக்கூடியவர்களாக ஆவார்களாக! இதுவே அவர்கள் எஞ்சியிருப்பதற்கான, அவர்களது ஈடேற்றத்திற்கான வழியாகும்.

*இறுதியில் ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் இரண்டு மர்ஹூம்களின் நற்குறிப்பை எடுத்துக் கூறினார்கள். ஜனாஸா காயிப் தொழுகை தொழ வைப்பதாக அறிவிப்பு செய்தார்கள்.*

முதல் குறிப்பு, குஜராத் மாவட்டத்தின் லாலா மூஸாவைச் சேர்ந்த சௌத்ரீ அப்துர் ரஹ்மான் சாஹிப் அவர்களின் மகனான **மதிப்பிற்குரிய ஸுகாவுர் ரஹ்மான் சாஹிப் ஷஹீது** அவர்களுடையதாகும். இவர்கள் கடந்த நாள்களில், ஜல்ஸா நாள்களில் 53 வயதில் ஷஹீதாக்கப்பட்டார்கள். இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன்.

மர்ஹூம் பொருள் தியாகத்தில் முன்னணி வகிப்பவராக, படைப்பினங்களுக்குத் தொண்டாற்றும் உணர்வு கொண்டவராக, ஏழை நோயாளிகளுக்கு இலவசமாக சிகிச்சை செய்பவராக இருந்தார்கள். மர்ஹூம் அவர்கள் துணைவியார், ஒரு மகன் மற்றும் மூன்று மகள்களைப் பின்விட்டுச் சென்றுள்ளார்கள்.

இரண்டாவது குறிப்பு, மலிக் பஷீர் அஹ்மத் சாஹிப் அவர்களின் துணைவியார் **மதிப்பிற்குரிய சய்யிதா பஷீர் சாஹிபா** அவர்களுடையதாகும். மர்ஹூமா கானாவில் இயக்கத்தின் முரப்பியான மலிக் குலாம் அஹ்மத் சாஹிப் அவர்களின் தாயார் ஆவார்கள். அவர்கள் செயல்களத்தில் இருந்ததனால், தம் தாயாரின் ஜனாஸாவிலும், நல்லடக்கத்திலும் கலந்து கொள்ள முடியவில்லை. மர்ஹூமா முறையாக தஹஜ்ஜுத் தொழுபவராக, ஐவேளைத் தொழுகைகளை முறையாகப் பேணுபவராக, கிலாஃபத்துடன் கலப்பற்ற தன்மை மற்றும் நன்றியுணர்வு நிறைந்த தொடர்பு கொண்டிருப்பவராக, துஆக்கள் செய்யக்கூடியவராக, அல்லாஹ்வின் திருப்தியில் திருப்தி கொள்ளக்கூடியவராக, நல்லியல்பு கொண்ட மற்றும் சான்றாண்மை மிக்க பெண்மணியாகத் திகழ்ந்தார்கள்.

*ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் மர்ஹூம்களின் பாவமன்னிப்பு மற்றும் அந்தஸ்த்தின் உயர்வுக்காக துஆ செய்தார்கள்.*

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا
مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِىَ لَهٗ وَنَشْهَدُ اَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ يَأْمُرُ بِالْعَدْلِ
وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِى الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ
اللّٰهِ اَكْبَرُ۔

(தமிழாக்கம்: மவ்லவி அத்தாவுல் முஃக்னீ)